## 2

# பரிசுத்த வாரம் தரும் ஜெபப் பாடங்கள்

Lessons on Prayer from the Holy Week

### *முகவுரை*

கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டதும் மரித்ததும் ஒரு **போராட்டம்** (warfare) ஆகும் —

எபே 2:14-16 … பிரிவினைச் சுவரைத் தகர்க்க …
கொலோ 2:14-15 … அதிகாரங்களை உரிந்துகொள்ள …
தீத்து 2:14-15 … அக்கிரமங்களிலிருந்து நம்மை மீட்க …
எபி 2:14-15 … பிசாசானவனை அழிக்க …
(demolish, disarm, deliver, destroy)

போராட்டத்தில் மோதியவை —

- தேவனும் சாத்தானும்
- நல்லதும் தீயதும்
- பெண்ணின் வித்தும் சர்ப்பத்தின் வித்தும்
- பரலோகமும் நரலோகமும்
- ஆவியும் மாம்சமும்
- சத்தியமும் பாரம்பரியமும்
- இறையரசும் இவ்வுலகும்

இயேசுவின் **உடல்தான்** போர்க்களம் —

சங் 129:3 … *என் முதுகின்மேல் உழுது …*

குழந்தை இயேசுவைக் கரங்களில் ஏந்திக்கொண்டு
மரியாளிடம் சிமியோன் சொன்னது இதுவே —
*''ஒரு பட்டயம் உன் ஆத்துமாவை உருவும்''* (லூக் 2:35)

இப்போராட்டத்தில் இயேசுவின் முக்கிய போராயுதம்: **ஜெபம்**

- கெத்செமனேக்குள் நுழைவதற்கு முன்னர்
  ஒரு நீண்ட ஜெபம் செய்தார் (யோ 17 & 18:1)
- கெத்செமனேக்குள் நுழைந்த பின்னர்
  ஒரு சத்த ஜெபம் செய்தார் (மத் 26:36)



நம்மைப்பற்றி என்ன?
நமக்கும் இப்போராட்டம் உண்டா?

ஆம்! — *பச்சை மரம்* vs. *பட்ட மரம்* (லூக் 23:31)
— *வான மண்டலங்களில் …* (எபே 6:12)

எபே 6:13-17இலுள்ள போராயுதங்களைப் பயன்படுத்தும்
திறனைத் தருவது **ஜெபமே** (வச 18).

ஜெபம் என்பது நமது வாழ்வின் வாடிக்கையாகிவிடவேண்டும் —
அவசரத்திற்கு அழைப்பு அல்ல!

உதாரணம்: ஒரு சிறுவன் கூரையில் வழுக்கினான்.
''தேவனே, காப்பாற்றும்'' என்று கதறினான்.
ஒரு சில நிமிடத்தில் ஆணியொன்றில்
மாட்டிக்கொண்டபோது சொன்னான்:
''பரவாயில்லை, பத்திரமாகத்தானிருக்கிறேன்!''

அவசர உதவிக்கே ஆண்டவர் எனும் எண்ணம்.

### *வெற்றியுள்ள ஜெப வாழ்வுக்கு ஏழு உறுதுணைகள்:*
### *பரிசுத்த வார நிகழ்வுகள் தரும் பாடங்கள் —*

### *1 . விசுவாசம்* (Faith)

மாற் 11:20-24 … அத்தி மரத்தைச் சபித்தது
மரத்துக்கு ஆண்டவர் செய்ததை மலைக்கு நாம் செய்யலாம்!
***''விசுவாசிக்கிறவன்… இன்னும் பெரிய காரியங்கள்''*** (யோ 14:12)

மலை = பிரச்னைகள், தடைகள்

நமது மிகப்பெரிய பிரச்னையைவிடத் தேவன் மிகப் பெரியவர்!

கானானுக்குச் சென்ற வேவுகாரர் —
*இராட்சதர்கள் … வெட்டுக்கிளிகள் … தேவன்* (எண் 13:28-33)

வேதத்தின் தேவனை அறிந்துகொள்ள
வேதத்தைத் திரும்பத் திரும்ப வாசியுங்கள்.

ஜெபத்திற்கு விசுவாசம் தேவை … விசுவாசத்திற்கு ஜெபம் தேவை!

எ.கா.) பேதுருவின் விசுவாசத்திற்காய் இயேசு ஜெபித்தார் (லூக் 22:32)

## *2. மன்னிப்பு* (Forgiveness)

மாற் 11:25,26 (விசுவாசத்தைப்பற்றிப் போதித்தவுடன்)

- கர்த்தருடைய ஜெபத்தில் நிபந்தனையோடுள்ள ஒரே வேண்டல் ''மன்னிப்பைக்'' குறித்தது (மத் 6:12)
- *''குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஜெபம்''* (யாக் 5:16)
- சிலுவையிலிருந்து இயேசு ஏறெடுத்த இரு ஜெபங்களில் முதலாவது — *''பிதாவே, இவர்களை மன்னியும்''*

ஒப்புரவாகவேண்டிய நபர்களைப் பட்டியலிடுங்கள்.
பிறர் பாவங்களை மன்னியாவிடில் நமது பாவங்களும் மன்னிக்கப்படாது.

எவருக்கும் விரோதமாக வைராக்கியத்தையும்
கசப்பையும் பேணிவைப்பது நமக்குத்தான் கேடு.

## *3. விழித்திருப்பு* (Watchfulness)

= கவனம், தெளிவு, கரிசனை
x கவலையீனம், ஏனோதானோ எனும் சிந்தை —
மத் 26:41 ... *விழித்திருங்கள் ... ஜெபியுங்கள் ...*

அதாவது, அவசரப்படாமல்
''ஒரு மணி நேரமாவது'' ஜெபம் (வச 40)
பயிற்சியினாலேயே இது சாத்தியம் (யோ 18:2)

இது சுலபமல்ல (மத் 26:41 ... *உற்சாக ஆவி* x *பலவீன மாம்சம்*)

உங்கள் வாழ்வில் ஜெப மணி நேரம் உண்டா?
அப் 3:1 (9ஆம் மணி = பிற்பகல் 3 மணி) ... *பேதுரு, யோவான்*
ஒரே நாளில் 3000 பேர் சபையில் சேர்ந்தார்களே,
எவ்வளவு வேலை இருந்திருக்கும்!

அ) ஜெபத்தில் **பாவனை** (Posture) —
இதுவும் விழிப்புக்கு முக்கியமானது.
படுத்துக்கொண்டு ஜெபிப்பது ✕
கால் மேல் கால் போட்டு ஜெபிப்பது ✕

முழங்காலிடுங்கள்!
*''முகங்குப்புற விழுந்து''* ஜெபித்தார் (மத் 26:39)



ஆ) ஜெபத்திற்கு **இடம்** (Place) —
ஜெபமென்றால் தேவனோடு இடைபடுதலாம்.
விழிப்பாயிருக்கவேண்டியதேன்?—
தேவன் உங்களோடு பேசுவார்!
இயேசு *''உன் அறையைப் பூட்டி ...''* (மத் 6:6)
கைபேசியை அணைத்துவிடுங்கள்.

## *4. ஒப்புக்கொடுத்தல்/அர்ப்பணித்தல்* (Yieldedness)

மத் 26:39,42,44 ... *உமது சித்தம் செய்யப்படுவதாக ...*
ஒப்புக்கொடுத்த பின்னரே **பலம்** வருகிறது (லூக் 22:42,43)

- முதலாம் ஆதாம் ஒரு தோட்டத்தில் தோற்றான்;
இரண்டாம் ஆதாம் ஒரு தோட்டத்தில் வென்றார்.

அன்று, அங்கு, சாப்பிடுவதற்குச் சோதனை;
இன்று, இங்கு, குடிக்காமலிருப்பதற்குச் சோதனை.

- கிறிஸ்துவின் இறுதி வார்த்தைகள் அர்ப்பணிக்கவே —
*''பிதாவே, உமது கைகளில் ...''*

தேவனது கரங்களில் விழுவதே மேலானது, பாதுகாப்பானது.
கடினமாயிருந்தாலும் தேவனது சித்தம், தேவனது வழிதான் மேல் —
1 யோ 5:14 ... *நம்பிக்கை ... தேவ சித்தம் ...*

திருவசனமே திருச்சித்தம்.
திருவசனத்தால் நிறைந்திருங்கள்.
எஸ்றா — நெகேமியா — நெகே 9:3
6 மணி நேரம் + 6 மணி நேரம்

- விருப்பு வெறுப்புகளுக்காவே ஜெபம் என்பது தவறு (யாக் 4:3,4)
உதாரணம்: ஒரு சிறுவனின் ஜெபம் —

''ஆண்டவரே, கல்கத்தாவை மஹாராஷ்டிராவின் தலைநகராக்கும்;
அப்படித்தான் புவியியல் பரீட்சையில் எழுதியிருக்கிறேன்!''

நமது விருப்பத்திற்கேற்ப தேவ சித்தத்தை மாற்ற அல்ல,
அவரது சித்தத்திற்கேற்ப நமது விருப்பங்களை மாற்றவே ஜெபம்!

## *5. கண்ணீர்* /நொறுங்கியிருத்தல் (Contriteness)

லூக் 23:26-28 ... *உங்களுக்காக, உங்கள் பிள்ளைகளுக்காக*
இயேசுவின் கண்ணீர் ... எபி 5:7 *[அழுங்கள்*
பவுலின் கண்ணீர் ... அப் 20:19,31
தீமோத்தேயுவின் கண்ணீர் ... 2 தீமோ 1:3

பவுல் இதை இயேசுவிடம் கற்றார்; தீமோத்தேயு பவுலிடம் கற்றான்.
நீங்கள் கண்ணீரோடு ஜெபிக்கக் கற்றுவிட்டீர்களா?

கண்ணீர் இல்லாவிடில் கலக்கம்தான்!
தேவனுக்குமுன் விழுந்து கிடப்பவன் மனிதருக்குமுன்
நிமிர்ந்து நிற்பான்!
கண்ணீர் சிந்துவோருக்கே வெற்றி!
(நெகேமியா அழுதான் ... எஸ்றா அழுதான் ... எஸ்தர் அழுதாள்)

தேவனது பார்வையில் கண்ணீர் அருமையானது (சங் 56:8)

*புத்தகத்தில் ஜெபங்கள்*
*புட்டியில் கண்ணீர்*

ஊழியத்தில் கனியில்லையே என்று விரக்தியடைந்திருந்த
உடன் ஊழியருக்கு வில்லியம் பூத்: ''அழுது பாருங்கள்!''
"Try tears!"

உங்கள் **பிள்ளைகளுக்காய்க்** கண்ணீருடன் ஜெபியுங்கள் —
*''உன் பிள்ளைகளுக்காய்க் கண்ணீர் விடு''* (புல 2:18,19)
நமது பிள்ளைகளின் காலம் நமதைவிடக் கொடியதாயிருக்கும்.

## *6. தனிமை/இருட்டு* (Loneliness/Darkness)

தனித்திருப்பது ஜெபத்திற்கு இன்றியமையாதது —

70 ... 12 ... 3 ... தனித்து! (மத் 26:36-39)
மாற் 15:33,34 ... *அந்தகாரம் ... என் தேவனே, என் தேவனே ...*
இதுவே சிலுவையிலிருந்து வந்த மத்தியக் கதறல்.

இரகசிய ஜெபமே ஜெபத்தின் இரகசியம்.

இருட்டு வேளைகள் வரத்தான் செய்யும் (ஏசா 50:10)



## *7. தைரியம்* (Boldness)

மாற் 15:37,38 ... *தேவாலயத் திரைச்சீலை கிழிந்தது*
எபி 4:14-16
6:19,20 *மகா பரிசுத்த தலத்திற்குத் திறந்த வழி*

மரியாளோ, ஊழியரோ, நடுவராய்ச் செயலாற்ற வேண்டியதில்லை.
தந்தையிடம் மகன் கேட்பதுபோல் ஜெபியுங்கள் (மத் 7:7-11)
*''அப்பா, பிதாவே''* (ரோ 8:15)
பிதாவை **நோக்கி**, இயேசுவின் **மூலம்!**

இன்று ''கிருபையின்'' ஆசனத்தருகே தரித்திருப்போம்;
நாளை ''மகிமையின்'' ஆசனத்தில் பங்குபெறுவோம்.

**''ஜெபமே ஜெயம்''** என்ற சுவர் வாசகம்
அப்பொழுதுதான் முழுமையாகப் புரியும்!
"Prayer brings victory!"

*ஜெபமே ஜீவன், ஜெபம் ஜெயம்,*
*ஜீவியத்திற்கு இதுவே சட்டம்!*

